**Subscription.**

**Inland: Rs. 50/- year**

**For Advertisement**

**Apply to:**

**The Manager,**

'The Morning Star,'

182, First Cross Street

JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q / J / 104 / News / 89]

**Established : 1841 : A Christian Weekly: Published Every Friday**

**Vol. 149 Jaffna, Friday, 15 SEPTEMBER 1989 No. 37**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**News and Articles in Tamil and English. Please send them to**

**THE EDITOR,**

'The Morning Star,'

182, First Cross Street,

JAFFNA.

RECEIVED 1989-10- 3 Periodicals Division Library Sri Lanka

## THE CSI IN THE EASTERN PROVINCE.

Saturday the 26th of August was a historic day for the CSI when it formally inaugurated its work of mission and outreach in the Eastern Province. A property has been bought at Uranee about a mile away from the heart of Batticaloa town. It is situated in a beautiful setting just beside the lagoon. The two houses in the land are now used for the Parsonage and Girls' Home respectively. A new building has been constructed to house the Day Care Centre.

The Rt. Rev. D. J. Ambalavanar along with the Rev. A. Jeyakumaran, Secretary of the Diocesan Council and the Rev. S. Jeyanesan, Minister in the Killinochchi District visited the Eastern Province during that week-end for the opening ceremony. At 3-30 p. m. on that day there was a large gathering of over 300 people-friends and well wishers. The Bishop with a dedicatory prayer declared open the Centre, named as St. John's Church Centre. Soon after, the M. P. for Batticaloa Mr. Prince Casinader declared open the Girls' Home. The Girls' Home has now 46 children. The Day Care Centre has 50 children under the age of five.

At the public meeting which followed the opening ceremony, Mr. Prince Casinader as the Chief Guest paid a warm tribute to the work of the CSI and for the ministry it has started in the Eastern Province. He said this was the first public function he was attending after becoming the Member for Parliament. He felt it was inappropriate for him to be participating in functions and felicitations when the people were going through so much of hardships and trials. However, he was making an exception on this occasion as he has heard of the good work of the CSI in the Northern Province and wanted to encourage and welcome their efforts in the Eastern Province as well. Mr. Casinader went on to say that it was a strange paradox in our country that a land that is covered with Dagobas, Temples, Churches, Mosques and Shrines all over, there should be so much of violence, killings and destruction going on unabated. What the country needs is not so much the externals of religion, but genuine commitment for justice, love and peace, which is preached by all religions. He commended the good work begun by the Rev. Earl Solomons, the CSI minister in the Eastern Province and hoped that he would be able to initiate more such programmes for the benefit of the poor and the oppressed. Mrs. R. Chinniah, the Retired Principal of Vincent Girls' School during her message of greetings, expressed the fact that she as a product of the American Ceylon Mission from Tellippalai and later as a student of Uduvil Girls' College, spent her lifetime in the Eastern Province ministering in that part of the country. She was therefore delighted to welcome the new efforts of the CSI in the Eastern Province and wished the Rev. and Mrs. Solomons God's Blessings in their work. Other speakers included the Rev. Hugh Canagasabai and a representative of the Anglican Church. The Methodist Youth Fellowship of Pulianthivu rendered special songs at the function. The Rev. Earl Solomons proposed a vote of thanks and the Rev. S. Jeyanesan said the closing prayer. A fellowship tea followed the function.

On Sunday the 27th, the Bishop along with his team visited three or four other villages in the Eastern Province where there was a possibility of starting projects for the poor. On Sunday evening at 4-30 p. m., the Bishop celebrated the first Holy Communion Service at the St. John's Church Centre.

*News:*

## ★ Thevakiramam Day Care Centre.

Thevakiramam is a new colony that has sprung up close to the Christa Seva Ashram and the Seminary & Institute for Lay People at Chunnakam. This colony has grown during the last few years and belongs to the category of the very poor. The Diocese has started a development project for the benefit of the colony. A beginning was made by providing water service, but much more will have to be done to meet the need.

The Diocese was able to purchase a piece of land belonging to the Ashram and has started a Day Care Centre for children under five from families in and around the colony. A temporary structure for this has been constructed. Arrangements are being made to construct a tube well and a more permanent structure. This centre was formally declared open and dedicated by the Rt. Rev. D. J. Ambalavanar on Tuesday the 22nd of August at 3-00 p. m. At the public meeting which followed the opening ceremony, Mr. Rajan Kadirgamar, Registrar of the Seminary and the Rev. Sam Alfred, Sevak of the Ashram spoke. Mrs. Ramani Thambiappa who has supervised the work in the centre and has taken an active interest in the welfare of the colony, thanked all those responsible for making it possible to start the Day Care Centre. This centre meets a deep felt need for the poor in the area. A fellowship tea followed the public meeting.

## ● Sri Lanka Methodist Conference.

The Annual Conference of the Methodist Church of Sri Lanka as usual was held again this year during the last week of August at the Methodist Headquarters in Kollupitiya.

The Rev. Dr. Kingsley Muttiah has been elected President of the Conference as from its next sessions in 1990. The Rev. Duleep Fernando has been elected General Secretary of the Conference.

Dr. Kingsley Muttiah who was for the last few years General Secretary of the Conference is a son of the late Rev. & Mrs. D. N. Muttiah, also of the Methodist Church. The Rev. Duleep Fernando is a son of Mr. & Mrs. B. E. Fernando of Colombo. The Rev. S. Vivekanathan has been appointed Chairman of the North-East Synod.

## Wedding.

The marriage was solemnised between Mr. J. Gnanapiragasam, Worker In Charge of the JDCSI Atchuvely Church and Miss Devagi Selvadurai, Teacher at Atchuvely on Saturday the 2nd of September at 9-00 a. m. at the JDCSI Church, Atchuvely. Mr. Gnanapiragasam is a son of Mr. & Mrs. J. Gnanapiragasam and Devagi a daughter of the late Mr. J. Selvadurai and Mrs. Selvadurai of Atchuvely. The Rt. Rev. D. J. Ambalavanar solemnised the marriage, assisted by the Rev. V. N. Tharmakulasingam. The Rev. Sam Alfred preached the homily.

## ★ News From U. K.

We are happy to have in our midst the student's Counsellor of St. Johns College Mr. Joe D vanand who is on a short visit t UK. Readers may be aware th Mr Joe Devanand pioneered t first movie from the North 'Pa Nila'. Incidently the star of th movie Mr A E Manoharan is cu rently in the UK.

ACT welcomes the Rt. Re D. J. Ambalavanar, Bishop of Jaffna who is on a short visit and Dr. (Mrs.) Chandra Ambalavanar the acting medical superintendent of Manipay Hospital, who will be in Colchester for a few more weeks.

The first ever cultural evening organised by the London Tamil Congregation was held on 10th June 1989. There were dances to traditional lyrics performed by Misses Suhanya Thavabalachandran & Rebecca Selvarajasingham. A Kuchipudi dance using lamps was performed by the pupils of Mrs. Joachim of the West London Tamil School. The evening's highlight was a Veena recital and some melodious singing by the three Pararajasingham sisters of Chundikuli. A fellowship dinner followed thereafter.

MISSION '89 in UK by the Rev. Billy Graham attracted over 35,000 on all days. For the first time in the history of his mission in the west, Tamil interpretation was provided at the West Ham gathering. ACT provided transport for several to attend the meeting.

An informal discussion was organised by ACT with a representative gathering of Tamils in UK and the Bishop of the Jaffna Diocese of Church of South India when the latter was in UK during the early part of July. The Rt. Rev. D. J. Ambalavanar gave first - hand information on the plight of the Tamils living in the North and East of Sri Lanka. Bishop Ambalavanar was on a short visit to London having attended a conference in Oslo recently. He left for Sri Lanka on the 18th of July.

Bishop Deogupillai Celebrated Mass at St. Xaviour's Church in Lewisham in July and urged the congregation to pray for their homeland. The entire service was meticulously organised by the dynamic members of the Catholic Association of Tamils. The reading of the lessons, the intercession and the choir's performance signified the witness of the Catholic Church in propagating the gospel to the people. ( to be continued )

# உதய தாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ். வெள்ளிதோறும் வெளிவருவது

நீதி ஜனத்தை உயர்த்தும் : பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்

மலர் 149 15 - 09 - 1989 [இதழ் 37


## சிந்தனை 30.

ஆமோஸ் 3 : 5 :- 1 - 15,

### நன்மையே தேடுங்கள்,

இறைவனுடைய அன்பு - கரிசனை - ஈடுபாடு இவற்றை அறிந்து மனித இனத்தின் மறுவாழ்வுக்காகவும் நிறைவாழ்வுக்காகவும் பாடுபடுபவன்தான் இறைவாக்குரைப்பவன். மக்களை அழிவிலிருந்து மீட்டு எடுக்க வேண்டும் என்ற உயிர்த்துடிப்பு உடையவர்கட்கு இறைவன், அறிவுரையும் ஆலோசனையும் தராது விடமாட்டார். இவ்வுண்மையை ஆமோஸ் 3:7 இல் கூறுகின்றார்: 'கர்த்தராகிய ஆண்டவர் இறைவாக்குரைப்போராகிய தம்முடைய பணிவிடையாட்களுக்குத் தமது ஆலோசனையைத் தராது விடமாட்டார்.

இறைவனுடைய செயற்பாடு என்ன என்பதை இஸ்ரவேல் மக்கள் புரிந்துணரும்படி வாக்கு வல்லமையுடன் ஆமோஸ் செயற்பட்டார்.

இறைவனைப்பற்றிய தன் அறிவு என்ன என்பது பற்றி 4·13 இலும் 5:8இலும் கூறுகின்றார்.

தன்னால் தெரிந்து கொள்ளப்பட்டோரில் இறைவன் அதிக கவனமாகவே இருக்கிறார். தெரிந்து எடுக்கப்பட்டோரின் சிந்தனை, செயற்பாடு, எதிர்காலத் திட்டங்கள், இறை அறிவின் ஆழ அகல நீளம் என்ன என்பதை அறியும் ஆவலுடையவராகவே இருக்கின்றார். தன் அன்புக்கும் தன்னால் தரப்பட்ட திருச்சட்டத்திற்கும் இவர்கள் அடங்கி வாழுகின்றார்களா? முரண்பட்டு வாழுகின்றார்களா? என்பதைக் கவனித்துக் கொண்டே இருக்கிறார். இறைவனுடைய நோக்கத்தினின்று தன்மக்கள் தவறும் போது, இவர்களைத் தட்டிக் கேட்கும் இறை அரசின் இணைப்பதிகாரிகள்தான் இறைவாக்குரைப்பவர்கள். 'தட்டிக்கேட்க ஆள் இல்லை என்றால் தம்பி சண்டப் பிரசண்டன்' என்பார்கள்.

தன்னுடையவர்கள்- தன்னால், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தவறும் போது இறைவன் வேதனைப்படுகின்றார். இவ்வுண்மை எரேமியா 8:21 இல் எதிரொலிக்கின்றது. இவ்வேதனை கோபமாகித் தண்டனையாக மாறும். தவறு செய்யும் தன் பிள்ளையைத் தண்டியாது பிறர் பிள்ளையைத் தண்டிப்பது நீதியாகுமா?

மனுச் சக்கரவர்த்தி தன் மகன் செய்த தவறுக்கு, தானே தண்டனை தந்து நீதியை நெறிப்படுத்தியதால் மனுநீதி என்ற மரபுச்சொல் உருவானது. உலகவியலரங்கில் மன்னனொருவன் நீதிகாத்தான் என்றால், இறைவனுடைய நீதி எவ்வளவு கனமானதாக இருக்கும் சிந்தித்துப்பாருங்கள்.

இஸ்ரவேலரைத் தண்டிக்க இறைவனிடம் உரிமை இருந்தது, என்பதை 3:2 ஆம் வசனம் வலியுறுத்துகின்றது. இவர்களில் இறைவனுக்கு உண்டான கோபம் தண்டனையாக மாறியதற்குக் காரணம் 4:11,12ஆம் வசனங்களில் தரப்படுகின்றது. 'ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

'உன் இறைவனைச் சந்திக்க ஆயத்தப்படு' என்னைத் தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள்' (5:4)

இஸ்ரவேலருடைய அடிப்படையுணர்வு, பொருள் தேடுவதிலும் சுகபோக வாழ்விலும் இருந்ததே அன்றி இறைவனைத் தேடுவதிலும், இறை உறவில் தரித்திருப்பதிலும், அன்புக்கு அடையாளங்களாக வாழுவதிலும் இருக்கவே இல்லை. கி.மு எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இறை மக்களின் நிலைப்பாடும் கி.பி இருபதாம் நூற்றாண்டில் வாழும் இறைமக்களின் நிலைப்பாடும் இது தான். மாற்றம், என்றுமே கேள்விக் குறிதான்.

வசதியாக வாழவிரும்பியவர்கள் வசதி வாய்ப்பு இல்லாதோரை மறந்தும்- அன்னவர்க்குத் தர வேண்டியதைத் தராதும், எப்படியும் பொருள் சம்பாதிக்கலாம்- என்ற வழிமுறைகளையும் பயன்படுத்தலாம் என்ற தவறுதலான உணர்வுகளுக்கு அடிமைப்பட்டு வாழ்ந்தார்கள். உணர்வுகள் அவசியம் வேண்டும். உணர்வுகளுக்கு அடிமைப்பட்டுவிடக் கூடாது. உணர்வுகளை அடக்கி வழிப்படுத்த உதவுவதே இறைஉறவு. இறைஉறவு குறைவுபட்டால் அரசியல்- சமூக- சமய- பொருளாதார வாழ்வில் உடைவுகளும் ஆவாரங்களும் ஏற்படும்.

இஸ்ரவேலரின் சுகபோக வாழ்வுக்கும், சீர்கெட்ட வாழ்வுக்கும் இடையே நசுங்கியவர்கள் ஏழைகளும், ஏழைகளாக்கப்பட்ட நீதிமான்களுமே, இவர்களுடைய வாழ்க்கை முறை, இலக்கணம் இல்லாதகவிதைகளானது கண்டு சினம் கொண்ட ஆமோஸ் 4:1 ஆம் வசனத்தால் கண்டனக் குரலை எழுப்பினார்.

இறைவனுடைய பரிசுத்தத்திற்கு அடையாளமாக இருக்க வேண்டியவர்கள் தவறினால், தண்டனை நிச்சயம் என்று 4:2 ஆம்வசனம்கூறுகின்றது. அடையாளங்களாக வாழாதவர்கள் பலிகளாலும் சமயச்சடங்குகளாலும் தாம் இறைமக்கள் என்று அடையாளப் படுத்த நினைத்தார்கள். கண்கெட்டதன் பின் சூரிய நமஸ்காரம் ஏன்? இக்கருத்தோட்டத்தில்நின்றே 3:14 ஆம் வசனத்தால் கண்டிக்கின்றார். இத்தகைய கண்டனக்குரல் திருச்சபை மக்களுக்கு எதிராக வரவே கூடாது.

ஏழை- பரதேசி- அன்னியர்- அடிமை- கணவன்- மனைவி இவர்கள் பற்றி லேவியர் 19:9-18 உபாகமம் 15:7, 11: 24 அதிகாரங்கள் வரையறுத்துக் கூறியும் இஸ்ரவேலர் எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டார்கள். இது கண்ட ஆமோஸ் வேதனைப்பட்டு இறைவனோடு உறவாடியதால் கிடைத்த பதில் 5:12 இல் தரப்படுகின்றது.

மனத்திலே சுத்தமில்லை-செயலிலே இறைவனுடைய சித்தமில்லை. ஆனால் பலிகளும், சடங்குகளும், காணிக்கைகளும் ஓகோ என்று நடந்தன.

வெள்ளை நிறப்பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது.

வேண்டியதை இறைமுன் கொண்டுவரத் தவறி, வேண்டாத்தகாததைக் கொண்டு வந்தவர்களைக் கண்டவனுந்திரவாசியான ஆமோஸ் சினம் கொண்டு இறைவாக்குரைத்தார். ஏழைமக்களையும், அவர்தம் எளிமை வாழ்வையும்- நீதிகேட்டு வேதனைப்பட்ட நீதிமான்களையும், இவர்களின் பளுவான சுமைகளையும் தானேசுமந்துபார்க்கின்றார். சுமைக்குக் காரணமானவர்களைச் சாடுகின்றார். இவர்களுக்கு வரப்போகும் அழிவுகுறித்து எச்சரிக்கின்றார். எச்சரித்த ஆமோஸ் 5:14 இல் அன்பின் அழைப்பை விடுக்கின்றார்.

மனித அழிவை விரும்புபவர் இறைவனல்ல. மீட்பியலே இறைவனுடைய திட்டம். இத்திட்டத்திற்கு முரண்பட்டு, அழைக்கப்பட்ட பணியாட்கள் செயற்படவும் முடியாது- செயற்படவும் கூடாது, அழிவுபற்றிக் கூறும் ஒருவர், மீட்கப்படும் வழிபற்றியும் கூறவேண்டும். இல்லையென்றால் செய்தி குறைவு பட்டுவிடும். 5:14 ஆம் வசனம் ஆமோஸின் செய்தியை நிறைவுபடுத்துவதாயுள்ளது.

சிறுமைப்பட்டோரைப் பயன்படுத்திச் சீரோடு வாழும் உலகம் அன்றும் இருந்தது- இன்றும் இருக்கின்றது. சமூக- சமய- அரசியல் வாழ்வில் இது மாறாத உண்மை.

ஏழைகள் விடும் கண்ணீர், இவர்களை வேதனைப்படுத்தாது. நீதிகேட்டு நிற்போரின் குரல், குரோதக்குரலாகவே இருக்கும். பசித்து ஒட்டிய வயிறுகளும்- கூனிக்குறுகிய மேனியும்இவர்கட்கு இசைமீட்கும் கருவிகளாகவே பயன்படும்.

இத்தகைய மக்களுக்குக் குரல் கொடுக்கவல்ல அதிகாரிகள் இல்லாத காலகட்டத்தில், சிறுமைப்பட்டோருக்காகக் குரல் கொடுத்த நம் மீட்பர் கிறிஸ்துவை, எருசலேமுக்குப் புறம்பாக்கஅதிகாரிகள் திட்டமிட்ட வேளையில் எருசலேமின் அழிவை, தூரப்பார்வையில் கண்ட நமது மீட்பர் கண்ணீர் விட்டார். இக்கண்ணீர் மாய்மால வாழ்வு வாழ்ந்தோருக்கு எதிரானதே. லூக்கா 19:41-44.

இன்று செயற்படும் கிறிஸ்துவாகிய திருச்சபையின் உடலுறுப்புக்களாகிய நாமும்- நமது சிந்தனையும் செயற்பாடும்மாய்மாலமுடையதாக இருந்தால், நம்மீட்பராகிய கிறிஸ்துவின் கண்ணீர் தொடர்கதைதான். இக்கதை தொடராமல் இருக்க, 'தீமையை அல்ல நன்மையைத் தேடுவோம்'. துறையூரான்.

வண. ஆ. வே. யேசுதாசன்,
காரைநகர்.

## செய்திச்சரங்கள்.

### ★ திருமணம்.

ஜப்பானியப் பெண்கள் 28 வயதிற்குப் பிறகுதான். திருமணம் செய்துகொள்கிறார்கள். இதற்குக் காரணம், பெண்களுக்கு, குடும்பப் பொறுப்பைத் தெரிந்து கொள்ள 28 வயது ஆகிறது. அங்கு, மணப் பெண்ணுக்கு ஒரு வீட்டைக் கொடுக்கிறார்கள். வேறு எதுவும் கொடுப்பதில்லை.

### ● குறட்டை!

கணவனின் குறட்டை ஒலியைச் சகித்துக்கொள்ள முடியவில்லையே எனக் கவலைப்படும் மனைவிமார் இனி மேற் கவலைப்படவேண்டிய அவசியமில்லை? காரணம், குறட்டை விட்டுத் தூங்கும் கணவன்மார்கள் தான், தம் மனைவியரிடம் மாறாத அன்பு கொண்டவர்கள் என்று கண்டுபிடித்துக் கூறியுள்ளார் ஒரு மனோதத்துவ நிபுணர்.

### ஃ பராமரிப்புச் செலவு.

தாஜ்மகாலை, அதன் அழகு கெடாமல் கட்டிக்காப்பது அரசுக்கு பெருஞ் செலவை ஏற்படுத்தி வருகிறது. 1984ம் ஆண்டு உல்லாசப் பிரயாணிகள் மூலம் 5 லட்சத்து 64 ஆயிரம் ரூபா வசூலானது. ஆனால், அதேயாண்டில் கட்டடத்தைப்பராமரிப்பதற்குப் பத்தரை லட்சம் ரூபா செலவாகியது. வருடாவருடம் செலவு அதிகரித்து வருகிறது.

### பெரிய தொழிற்சாலை.

உலகிலேயே மிகப்பெரிய சைக்கிள் தொழிற்சாலை, நொட்டிங்காம்பில் உள்ள றலி கம்பனிதான். 62 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள இத்தொழிற்சாலையில், பத்தாயிரத்திற்குமதிகமானோர் பணியாற்றுகிறார்கள். வருடம், பத்துலட்சம் சயிக்கில்களுக்குமேல் தயாராகிறது.

### ★ கல்லீரல் கெடும்.

மது அருந்துபவர்கள் என்ன உணவு சாப்பிட்டாலும் கல்லீரல் கெடும். உணவு அதனைத் தடுப்பதில்லை என்று கல்லீரலைச் சோதனை செய்த விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். மது அருந்துபவர்களுக்கு இது அபாய அறிவிப்பு. மது, தன் அழிவு வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றது. கல்லீரலைக் காப்பாற்ற எந்த வழியும் கிடையாது.

### ● இயற்கைப் பாதுகாப்பு.

சளி என்பது நோயல்ல. நமதுஉடம்பிலுள்ள சில உறுப்புக்கள் நச்சுப் பொருட்களால் பாதிக்கப்படும் போது, அதைத்தடுக்கஉதவுவதுதான் சளி என்று மருத்துவ ஆராய்சியாளர்கள் கூறுகிறார்கள். நோயை விரட்ட இயற்கைதரும் பாதுகாப்புத்தான் சளி என்கிறார்கள்.

### ஃ தையற் பயிற்சி நிலையம்.

இலங்கை – மெதடிஸ்த திருச்சபையின்175வது ஆண்டுப் பெருவிழாவை முன்னிட்டு, எமது சேகரத்தின் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவில் நெல்லியடிச் சபையில் ஒரு தையற் பயிற்சி நிலையம் 17.08.89 வியாழன் காலை 9.30 மணிக்கு அருட்திரு S.K. கதிர்காமர் தலைமையிற் திறந்து வைக்கப் பட்டது. சேகரத்தின் செயலாளரும், சபையின் ஆலய உக்கிராணக்காரனுமாகிய திரு. J.S. கிறிஸ்ததாஸ் நன்றியுரையை வழங்கினர். வைபவ முடிவில் யாவருக்கும் பெண்கள் சங்கச் சார்பில் சிற்றுண்டியும் தேநீரும் வழங்கப்பட்டன. இந்நிலையத்தின் பயிற்சி ஆசிரியை திருமதி தேவமணி மனோகரன் சபையோரை வரவேற்றுப் பேசினார்.

### பாடும் நெருப்பே பாரதி!

இடி, மழை, புயலென ஆர்த்தான்!- அவன்
இரும்பெனக் கவிதைகள் வார்த்தான்!
வெடியென அவற்றை வைத்தான்!- தமிழ்
வேட்டுகளாலெமைத் தைத்தான்
பொடிபடும் விலங்கெனச் சொனான்!-ஒரு
பொழுதிலும் தாழ்வினை எண்ணான்;
அடிமையின் தளைகளை அறுத்தான்!- அவன்
அதுவரை சுகங்களை ஒறுத்தான்!

ஜெயசீலன்.

### சிந்தியுங்கள்.

''ஏழையின் கண்ணீர் கண்டு எவன் இதயத்தில் 'குருதி' கசிகின்றதோ...? அவனில் இறைவனைக் காண்''!

''இறைவன் நமக்குக் கொடுப்பதிலும் 'கருணை' இருக்கிறது. கொடுக்க மறுப்பதிலும் அவரின் கருணை இருக்கிறது.''

''நன்றாக விஷயங்களை அறிந்தவன்-சிறிய விஷயங்களை அறிந்தவனைவிட 'அடக்கமாக' இருப்பான் ''

''பேசுபவனைக் கவனிக்காதே! அவன் பேச்சைக்கவனி! அவன் பேச்சின் ''நீளம்'' அவன் மதிப்பைக் குறைத்துவிடும்.''

''வறியவர்கட்கு இரக்கமுடன் ஈந்ததால்—அது? மீண்டும் ''ஒன்றுநூறாக'' எம்மிடம் திரும்பும்.''

**தாரகை ஒளி:-**

பயபக்தி யிலாரகம் தீமைசெய நாடும்;
அவன்கண்ணில் அயலானுக் கிரக்கமே கிடையா.

— நீதிமொழிகள். 21 : 10

# எங்கள் கருத்து

## ★ நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு! ★

தமிழரின் எதிர்காலம் இருள்மயமாயிருக்கும் இக்கட்டத்தில், பல வழிகளால் நெருக்கடிகள் நம்மைத் தாக்கும் இக்கட்டத்தில், மாற்றானின் சூழ்ச்சியினால் தமிழரின் வீரம், வலிமை விரைவாகக் குன்றிவரும் இக்கட்டத்தில் தமிழ் மக்களாகிய நாம் இன்னும் பிரிவுபட்டு, ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டிருப்பதின் கருத்து என்ன? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்!

சில ஆண்டுகளுக்கு முன், தமிழரின் ஒன்று பட்ட நிலையைக் கண்டு, அரசின் தலைமைப் பீடமே அஞ்சினதல்லவா? நம்மைப் பிரித்து, நமது வலிமையைக் குறைக்க வேண்டுமென அவர்கள் போட்ட திட்டம் பலித்து விட்டதே! இந்த வலிமையற்ற நிலைக்கு வருவதற்காகவா, எமது வாலிபர்களில் ஆயிரக்கணக்கானோர் வீரமரணம் எய்தினர் - பல்லயிரம் அப்பாவி மக்கள் மாண்டனர்.......?

நாம் சேர்ந்து வாழவேண்டும். அன்றேல், நாம் சேர்ந்து மடிவது நிச்சயம். இது வரலாறு கண்ட உண்மை— ஒருமுறை காட்டில், பெரு வெள்ளம் வந்தது. அங்குள்ள காட்டு மிருகங்கள் அனைத்தும், வெள்ளத்தில் மாண்டுபோகாமற் பிழைப்பதற்காக ஓடோடி வந்து, அக்காட்டில் உள்ள ஓர் உயர்ந்த திடலில் ஏறிநின்றன. இக்காட்சியைப் பார்த்தவர்கள் கண்ட அதிசயம் — இத்திடலில் நின்ற மிருகங்களிற்பல, சாதாரண நாட்களில் ஒன்றையொன்று கொன்றுதின்னும் குணம்படைத்தன. புலியும் மானும், சிங்கமும் மாடும், — இவ்விதம் ஒன்றையொன்று எதிர்க்கும் மிருகங்கள் ஒன்றாக நின்றன. இது ஒரு அதிசயக்காட்சி தானே! இதனால் நாம் ஒரு பாடம் கற்பது நல்லது.

காட்டு மிருகங்களே, நெருக்கடி காலத்தில் ஒன்றுபட்டு வாழத் தெரிந்திருந்தால், ஆறறிவு படைத்த நாம் நெருக்கடி காலத்திலும் பிரிந்திருந்து, ஒருவரையொருவர் எதிர்த்திருந்தால், நமது நிலையென்ன? எங்கே எமது பண்பாடு? 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு' என அன்று அமர கவி பாரதியார் பாடியது, ஏட்டுச்சுரக்காய் ஆகிவிட்டதா? நன்கு சிந்தித்து பாருங்கள்!

நாம் ஒன்று பட்டாற் தான், இறைவன் நமக்கு உதவியருள்வார். நான் உங்களில் அன்பாயிருப்பது போல், நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்' என இயேசு பெருமான் கூறிய அமுதவாக்கை எண்ணிப் பாருங்கள். நாம் ஒன்றாய் வாழ முதலடி எடுத்து வைத்தால், நம்மில் உள்ள பிரிவினைகள் அகலத்தொடங்கும். இறைவனின் அதிசய நடத்துதலை நாம் கண்டு மகிழ்வோம்!

வாருங்கள்! நாம் சேர்ந்து வாழ்வோம்!

## அமரர் அருள் திரு. சாம் தம்பு அவர்களுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை.



தென் இந்தியத் திருச்சபை, யாழ். ஆதீனச் சபைகளில் குருவானவராகப் பல ஆண்டுகள் கடமையாற்றி, கடந்த ஆண்டு செம்தெம்பர் மாதம் இறைவனடி சேர்ந்த கனம் சாம் தம்புப் போதகர் அவர்களின் வாழ்க்கைக்காகவும், குருத்துவப் பணிக்காகவும், யாழ். ஆதீனத்தின் சார்பில் நன்றி செலுத்தும் ஆராதனை, இம் மாதம் 12 ஆம் திகதி, பிற்பகல் 3 00 மணிக்கு சாவகச்சேரித் தேவாலயத்தில் பேராயர் அருள்திரு. டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ்வாராதனையில், வண. டி. ஆர். அம்பலவாணர் அவர்கள் அருளுரை வழங்கினார். யாழ். கல்லூரி அதிபர் டாக்டர் எஸ். ஜெபநேசன் அவர்கள், தம்புப் போதகர் பற்றி இரங்கலுரை வழங்கினார். திருமறைப் பாடங்கள், செல்வி ஜே. எஸ். தம்பு, செல்வன் என். எஸ். தம்பு ஆகியோரால் வாசிக்கப்பட்டன. சிறப்புப் பாடல்கள், உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் குழு, சாவகச்சேரி சபைப் பாடகர் குழு ஆகியவற்றால் பாடப்பட்டன.

ஆராதனையின் பின், பேராயர் அம்பலவாணர் அவர்களால், கனம் சாம் தம்புப் போதகர் அவர்களின் நினைவாக, சாவகச்சேரி தேவாலயத்தில் நிறுவப்பட்ட நினைவுக்கல் திறக்கப்பட்டது.

இதன் பின் அனைவருக்கும், போதகர் அவர்களின் மனைவி, மக்களால், தேநீர் விருந்துபசரணை நடத்தப்பட்டது.

## கிறிஸ்தவம் வைணவம்

விட்டுணு சமய அறிஞர்கள் வேதங்களின் பொருள் முடிபாக அமைந்துள்ளவை. உபநிடதங்கள் எனவும். அவற்றால் வலியுறுத்தப்படுகிற உண்மைகளைப்பற்றிய முடிபாய விளக்கங்கள் 'வேதாந்தம்' எனவும் புகட்டியிருக்கிறார்கள். 'பகவத் கீதை, 'பிரம சூத்திரம், ஆகியவற்றைத் துணையாகக் கொண்டெழுந்த கோட்பாட்டு விளக்கங்களும் ,வேதாந்தம்' எனவே வழங்கப்படுகின்றன. இவ்விரிவுரைகளை வழங்கிய பெருமக்களுள் சங்கரர், இராமானுசர், மாத்துவர், நிம்பர்க்கர், வல்லபர், சைதன்னியர் என்பவர்கள் ஓங்கிய சிந்தனையாளர்களாகக் கொண்டாடப்படுகின்றார்கள். ஆண்டாள் அம்மை உள்ளிட்ட ஆழ்வார்கள் பன்னிருவர் தாங்கள் படைத்துள்ள பக்திப் பாடல்களில் வேதாந்தங்களின் சாரத்தைப் பிழிந்து வழங்கியிருக்கிறார்கள். இக்காலத்தும் காஞ்சியில் வீற்றிருக்கின்ற பெரியவர்கள் சங்கராச்சாரியார் வேதாந்தக் கொள்கைகளை நன்கு பரப்பி வருகிறார்கள். இவர்களின்றி இக்காலத்தில் பல்கலைக் கழகங்களின் வாயிலாகவும் வேதாந்தம்பற்றி ஆய்வு நூல்கள் பல வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

கிறிஸ்து நெறியைப்பற்றிய மெய்ம்மைகள் விவிலியத் திருமறையில் கொடுக்கப்பட்டுள்ளன. கிறிஸ்து சமய இயல், இக்காலத்தவரால் 'இறையியல்' எனவழங்கப்படுகிறது. கிறிஸ்துக்கு, பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த ஏசாயா முதலிய தீர்க்க தரிசிகளும், அப்பெருமானின் அடியார்களாக வாழ்ந்திருந்த (கி.பி. முதல் நூற்றாண்டு) புனிதர்கள் யோவான், பவுல் முதலியவர்களும் கண்ட கிறிஸ்து நெறிச் சத்தியங்கள் விவிலியத்தின்கண் காணப்படுகின்றன. பின்னர் அகஸ்தியன், மார்ட்டின் லூதர், கால்வின் முதலிய பெருமக்களும், அவர்களுக்கும் பின்னர் 'கார்ள் பார்த், புருனர் ஜாண்ச்டாட் முதலிய அறிஞர்களும் இறையியல் விளக்கங்கள் விரிவாக எழுதிச் சென்றிருக்கிறார்கள். நம் நாட்டில் இறையியல் எண்ணங்கள் வளர்வதற்கு வீரமாமுனிவர், மகாகவி கிருட்டினபிள்ளை, தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார், பரமானந்தம் அய்யர், எ.மு. சாலமோன் அய்யர் முதலிய இலக்கியர்களும், பேராயர் ஏ.செ. அப்பாசாமி, செஞ்சையா, சக்கரை. தேவானந்தம் மற்றும் நியுபிகின், பணிக்கர் முதலிய பிறரும் உறுதுணையாக இருந்திருக்கிறார்கள்.

வைணவத்தில் சங்கரர் (கி.பி 788) கூறிய அத்துவைதமும், இராமானுசர் (1018) கூறிய விசிட்டாத்துவைதமும் மாத்துவர் (1198) கூறிய துவைதமும்அடிப்படையானவைஎன்பதைஎவரும்அறிவர். இவற்றுள் அத்துவிதம் (அதவைதம்) இருமையின்மை அல்லது இரண்டன்மை எனப் பொருள்படுவது. இது பிரமமும் ஆன்மாவும் இரண்டு வெவ்வேறாய பொருள்கள் அல்ல என்று கூறுவது விசிட்டாத்துவிதம் என்பது பிரமமும் ஆன்மாவும் இருவேறு பொருள்களாகவும் ஒரே பொருளாகவும் உள்ளன என்று கூறுவது துவிதம் (த்வைதம் என்பது பிரமமும் ஆன்மாவும் வெவ்வேறானவை என்று கூறுவது.

கிறிஸ்தவமும் வைணவமும் உட்படச் சமயங்கள் அனைத்துமே மனிதனின் அல்லது ஆன்மாவின் விடுதலையைப் பற்றிய கருத்துடையனவாகவே இருக்கின்றன. இச்சமயங்கள் மூன்று பொருள்களைத் தங்கள் கோட்பாட்டுக்குரிய அடிப்படைகளாகக் கொண்டிருக்கின்றன. அவைகள்பரம்பொருள் (பிரமம்),ஆன்மப்பொருள் ஆன்மா அல்லாத (சடப்) பொருள் என்பவைகள். இவற்றின் உறவு நிலைகளைப் பற்றிய செய்திகளே சமயச் செய்திகள் எனலாம்.

பிரமம், ஆன்மா. உலகம் ஆகிய இவை மூன்றும் அழியாதவை எனக் கருதுகிற வைணவம், பிரமமே உலகங்களையும் உயிர்களையும் தனக்கு உடம்பாகக் கொண்டிருக்கிறது என வலியுறுத்துகிறது. சாந்தியோக்கிய உபநிடதத்தில், கடவுள் உயிர்களைத் தம் உடலாகக் கொண்டிருப்பதாகவும்,அவ்வுயிர்களுக்குள் தாமே உயிராகப் புகுந்து அவ்வவற்றிற்குப் பெயர்களையும் வடிவங்களையும் உண்டுபண்ணுவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இக்கொள்கையினையே கம்பர், 'ஓதிய உடம்புதொறும் உயிரென உலாயது' எனப்பாடிச் செல்லுகிறார் (சமய நோக்கில் கம்பன் - பக் 38, 39).

வைணவம் சைவம், சாக்கதம் கௌமாரம்.காணுபத்தியம்,சௌரம் ஆகிய ஆறு சமய நெறிகளுக்கும் பொதுவான ஒரு கருத்தோட்டம் காணப்படுகிறது. அதாவது; ஆன்மா அறுதியாகவே மலத்தால் (பாவத்தால் மூடப்பட்டுக்கிடக்கிறது; ஆணவம், கன்மம், மாயை என்பவற்றில் புதையுண்டு கிடக்கின்றது. இது 'கேவல நிலை' எனப்படுவது. புதைபட்டுக்கிடக்கும் இந்த நிலையிலிருந்து ஆன்மாவை விடுவிக்க இறை(பிரமம்) முற்படுகிறது. எனவே இறை, மாயையை உலகங்களாக, புலனுக்குப் படுகின்ற சடப் பொருளாக, உடம்புகளாகத் தோன்றச் செய்து, ஆன்மாக்களை அவ்வுடம்புகளிற் புகச் செய்கிறது. இந்த நிலையில் ஆன்மா 'சீவன்' அல்லது 'சீவாத்மா' ஆகின்றது. பின்னர் இறை, கன்மம் எனப் படுகின்ற மலத்தை நல்வினை தீவினைகளாக விகற்பித்து சீவர்களினூடே அனுப்புகிறது. இந்நிலையில் சீவன், நல்வினைகளிலும் தீவினைகளிலும் உழன்று தன் வினைகளுக்கேற்ப உயர் உடம்புகளில் அல்லது தாழ் உடம்புகளில் பிறந்து இறந்தும், இறந்து பிறந்தும் உழல்கின்றது. இஃது ஓர் அடிமை நிலை; தளை; பந்தம். கேவலத்திலிருந்து ஆன்மாக்களை விடுவிப்பதற்காகவே பிரமம் இந்தத்தளைகளை உண்டாக்கியிருக்கிறது. (பந்தமும் வீடும் படைப்போன் காண்க' - மாணிக்க வாசகர்) தானே இறை (அல்லது இறைப்பொருள்) என்பதையும், தன்னுடைய மீட்சிக்கெனவே இறையினால் இந்நிலைக்குட்படுத்தப் பட்டதெனவும் சீவன் அறிந்து மெய்யுணர்வு பெறல் வேண்டும். இவ்வுணர்வு ஏற்படுகையில், தனக்குரிய இடமாகிய பிரமத்துடன் கலந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் சீவனுக்கு உண்டாகிறது. சீவன் இவ்வாறு முக்தியுற வேண்டுமென்பதில் சீவனுக்குள்ள ஆர்வத்தைக் காட்டிலும் பிரமத்திற்கு அதிக ஆர்வம் உண்டு. எனவே, (வைணவம்கூறுகின்றபடி) அச் சீவனை விடுவிப்பதற்காக இறை(வன்) 'அவதாரம்'செய்கிறான்; அல்லது, (சைவம் கூறுகின்றபடி) ஞானகுரு வடிவத்தில் ஆன்மாவைச் சந்திக்க வருகின்றான்.

இத்தகு மீட்சிக்குரிய பக்குவம் ஆன்மாவுக்கு அல்லது சீவாத்துமாவுக்கு (சீவனுக்கு) மூன்று நிலைகளில் ஏற்படலாம். அவை: ஒன்று, பயனி கருதாத செயற்பாடு (கர்மயோகம்). மற்றொன்று, தான்யாரென்று உணர்வதாகிய மெய்யறிவைப் பெறுவது (ஞானயோகம்). பிறிதொன்று இறைவன் பால் மாறாத அன்பு செய்தல் (பக்தியோகம்) இவற்றினும் மேலாக ''பிரபக்தி'' என்றொரு உயர்நிலை சொல்லப்படுகிறது. இது என் செயலன்று, அனைத்தும் இறைவன் செயலே என்று அவனுடைய திருவடிகளில் விழுந்துவிடுவது(சரணாகதி).

( மிகுதி அடுத்த இதழில்... )

## THE GOLDEN JUBILEE OF THE ASHRAM.

The Golden Jubilee Celebrations of the Christa Seva Ashram at Maruthanamadam came off on the 20th and 21st of August. 1989—Sunday and Monday. Among the Bishops and members of the clergy who participated in the services and meetings were the Rt. Rev. Dr. S. Kulandran, a founder member of the Ashram Board, the Rt. Rev. D. J. Ambalavanar, Bishop of the JDCSI, the Ven. Dr. Donald Kanagaratnam, Archdeacon of Jaffna, the Rev. Joseph Sarvananthan, President of the Jaffna Christian Union, the Rev. Isaac Selvaratnam of the Anglican Church, Nallur, the Rev. K. P. Govindaraja of St. Peter's Methodist Church, Jaffna and the Rev. D. R. Ambalavanar of the Christian Theological Seminary, Chunnakam.

It was a joyful experience for many to relax under the mango and margosa trees at the Ashram, relish the morning gruel of kanji after service and the noon menu of rice and Vegetables (repeated for dinner for those who chose to stay overnight) and above all the camaraderie of an outdoor programme for two days which included a Folk Drama by the seminary students based on the Parable of the Prodigal Son. St. John's College and Uduvil Girls College enriched the services by leading them or by giving special musical renderings.

On Monday the 21st morning the programme began with a Holy Communion Service at which Bishop Ambalavanar, Dr. Donald Kanagaratnam and the Rev. Govindaraj concelebrated. The Bishop preached the sermon. The Bishop said soon after the first world war two significant movements arose in India within the Christian Community. The movement for Church unity and the movement for an indigenous expression of christianity. The Ashram movement was the best expression of the movement for indigenisation. The attempt to bring in the monastic ideals into the life of the Protestant Church through the Ashram movement was a means of reaffirming the ideals of total commitment, simple and sacrificial living. The Christa Seva Ashram while it embodied these ideals was also unique in its close link with the churches and served as a centre for ecumenical relationships.

The Archdeacon of Jaffna, the Ven. Donald Kanagaratnam preached at the Thanksgiving service at 9-30 a. m. on the 21st. In the afternoon the Public meeting was presided over by Bishop Ambalavanar in the absence of Dr. E. S. Devasagayam, the chairman of the Ashram Board. The leaders of the three churches in Jaffna and the President of the J. C. U. brought greetings. The motto of the Ashram the Bishop reminded the audience was "Expect great things from God. Attempt great things for God" The Rev. S. Selvaratnam had borrowed William Carey's motto for Serampore College. William Carey the shoemaker had in fact as a missionary tried to provide the right pair of shoes for people to walk the walk of life — "Expect great things from God: Attempt great things for God". It is the same pair of shoes that the Ashram offers to our people today as they try to walk the walk of life.

A prayer meeting led by the Rev. Isaac Selvaratnam at the graveside of the departed Sevaks - Selvaratnam and Yesusahayam and the foundation stone laying ceremony for the Home for the Elders by Bishop Ambalavanar, Dr. Donald Kanagaratnam and the Rev. K. P. Govindaraj were the two climactic events of the two days celebrations.

The Rev. S. Selvaratnam lovingly referred to as Periannan moved into the Ashram, then only a cadjan shed on May 20, 1939. The first Communion Service at the Ashram was held on May 21, 1939. The early supporters who gave the Rev. Selvaratnam all the encouragement necessary for the venture were: The Revds. R. C. P. Welch, S. Kulandran, E. Middeton Weaver, D. T. Niles, J. T. Arulanantham and two laymen Mr. W. D. Niles and later Mr. J. Subramaniam Lewis.

Two publications bring the history of the Ashram almost upto the time of the Rev. S. Selvaratnam who passed away in 1973. One was written to mark the Silver Jubilee of the Ashram in 1964, the other is a Biography of the Rev. S. Selvaratnam written by Bishop Kulandran. The Golden Jubilee Number of the Ashram History (1939—1989) is in the Press. So is a biography of the Rev. S. Selvaratnam in Tamil.

CHRISTIAN SPIRITUALITY......
*(continued)*

The third presentation was by the Rev. P. D. Shyam Rao on 'Spirituality and Social Realities'. He expounded at length on spirituality as understood by people of different faiths. He then went on to describe Christian spirituality by saying that the two prominent popular trends—the other worldly and this worldly—have their merits and demerits While the former neglects the existential human dilemma, the latter ignores the transcendental aspect of human reality. Christian spirituality takes both into consideration. he said. He also proposed three aspects of Christian spirituality as important in our present social realities. Firstly, he said that, a transreligious spirituality alone can counter the divisiveness caused by the fundamentalist resurgence of religion. Secondly our spirituality should be dialogical as religious plurality today is a fact and that aggressive, exclusivist attitudes will not serve the purpose of effective mission. Thirdly, it also has to be an enabling spirituality as the majority of the Indians are kept unconscientised about liberative forces by the powers.

After four days of intense corporate and individual search, reflection and study, the participants tried to understand some of the key issues in a much larger perspective. There was no consensus as it is characteristic of youthful creativity. Yet, the following are some of the views generally agreed upon:

— suffering is not just physical pain or economic depravation only, but is much larger in nature. Alienation, humiliation, dehuminization, threat, shame, depravation, etc. are also to be put in this category.

— suffering is man-made. Human greed for money and power operating though social, political and economic structures are responsible for this. They need to be destroyed and a new just and humane order has to emerge.

— Christian spirituality is that which associates itself with the ongoing creative and redemptive activity of God seeking to fulfil God's promise through Jesus Christ— the abundant life for all. Spirituality should enable people to work towards this new social order.

— In this context, salvation through Christ has to be understood as a process of humanization. It is a process of liberation from all death dealing forces which work against God's good creation.

(continued — News U. K.)

The mass was followed by fellowship tea at the Church hall. During this time the Bishop was requested to speak to the people by the association. The President of the Association Mr. Matthew Manogaran welcomed his eminence and gave a brief sketch about the Catholic Association. The Bishop in his talk spoke about the hardships faced by common men and women in the Tamil homelands.

The Bishop later introduced a small booklet which contains the poems written in simple Tamil about the SAINTS. These were written over a century ago and the Jaffna Diocese was keen to republish them. The diocese needs the help of the congregation to fulfill this important mission which is part of the heritage of the Tamil people.

---

In Ever loving Memory of
of our dearest
DADDY & MUMMAY.

*ALFRED DURAISINGHAM THAMBIAH.*

**Born : 24-3-1821**
**Died : 09-1-1986**

*JESSIE SUGIRTHAMALAR THAMBIAH.*

**Born : 25-7-1825**
**Died : 23-9-1988**

"...... he that believeth in me, though he were dead, yet shall he live"

JOHN. 11: 25

*Fondly remembered by your loving* son, daughter & son-in-Law.
New Road,
Karainagar.

---

CHERISHED MEMORIES
of

**The Rev. K. S. Jeyasingam**
**Departed 6th, September 1980**
and
**Marjorie Rosemalar Jeyasingam**
**Departed: 8th, March 1976**

"I know that my Redeemer liveth.

Fondly remembered and deeply missed even as the years go by.
All your loved ones.
*25, Canon Somasundram Avenue, Chundkiuli.*

---

31st Day Anniversary

**Charles Ariyatheban Ariyaratnam**

**Called to Rest: 16-8-89**

Days may pass and fad away
*But thoughts of you both will always stay.*

inserted by their father, Mother & sisters
Allen Lane,
Karainagar.

---

SECOND DEATH ANNIVERSARY

In Loving Memory of
**Packiyadevi Jesudasan**
**Born : 27-09-1944**
**Died : 23-09-1987**

Years may pass and fade away
But thoughts of you both will always stay.

*Affectionately remembered by your loving husband,*
Thevananth, Jeevananthy, Babananthy & Thayananth.
C. S. D. Church,
Passonage.
Karainagar.

---

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/ News 89
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182,1st,Cross Street Jaffna on Friday 15.September.1989 and published by The Rev. THEVANESAN, 182, First Cross Street, Jaffna.